**<u>29.08.2022 O.S.No. 29 / 2016 (PW1) காத்தூன்பீவி க-பெ. முகம்மது இஸ்மாயில், பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) தாவா சொத்தின் பட்டா எண் என்ன என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்.41 ஆகும். நான் பிராதில் சொல்லியுள்ள A ஷெட்டியூல் சொத்தின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. A ஷெட்டியூல் சொத்தானது எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. பிராதில் சொல்லியுள்ள B ஷெட்டியூல் சொத்தின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. சர்வே எண்.41ன் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்தின் சம்மந்தமாக வழக்கறிஞருக்கு எனது மகன்தான் விரபம் சொன்னார். தாவா சொத்திற்குரிய விபரம் எனக்கு தெரியாது. எனக்கு சாம்பு ராவுத்தர் மனைவி பாத்திமா பீவியை தெரியும். முத்துபீவியையும் எனக்கு தெரியும். மேற்படியார்கள் உயிருடன் இருக்கின்றார்களா, இறந்துவிட்டார்களா என்று எனக்கு தெரியாது.

2) தாவா சொத்தை மேற்படியார்களிடமிருந்து முஸ்தப்பா ராவுத்தரும், சேது ராவுத்தரும் ஆகியோர்கள் எந்த தேதியில் கிரையம் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த கிரையப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது மகனிடம்தான் கேட்க வேண்டும். முஸ்தப்பா ராவுத்தர் எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. ஆயிஷா அம்மாள், அவரது மகள் ஷமிளா பீவி ஆகியோர்கள் சர்வே எண்.41ல் எவ்வாறு அனுபவம் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படியார்களுக்கு சர்வே எண்.41ல் உள்ள இடம் பாத்தியம் என்பதற்கு பட்டா பத்திரம் ஆகியவைகளை பார்த்துள்ளேன். எனக்கு சம்சுதீன் மனைவி வரிசையம்மாள் என்பவரைத் தெரியும்.

3) மேற்படி வரிசையம்மாள் என்பவருக்கு சர்வே எண்.41ல் உள்ள இடம் கிரையப் பாத்தியம் ஆகும். எந்த தேதியில், மாதம், வருடத்தில் கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த கிரையப் பத்திரத்தை பார்த்துள்ளேன், எனக்கு படிக்க தெரியாது, அது எனது வீட்டில் உள்ளது. சர்வே எண்.44ல் உள்ள இடம் பிரதிவாதி பக்கீர் முகமதுக்கு பாத்தியம். சர்வே எண்.44ன் கிழக்கு பக்கத்தில் சர்வே எண்.41 உள்ளது. சர்வே எண்.44 உள்ள இடம் காலியாகதான் உள்ளது. சர்வே எண்.44 இடத்தை நான் போர்டிகோ கட்டி ஆக்கிரமிப்பு செய்ததாக பிரதிவாதி என் மீது சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அதுவும் ஓ.எஸ்.107/2014 என்று வழக்கு நடந்து முடிந்தது என்றால் சரிதான்.

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif, Devakottai
Date: 2022.08.29 18:33:15 +0530

4) தாவா சொத்தாகிய சர்வே எண்.41ல் உள்ள இடத்தினை நான் எந்த தேதி, மாதம், வருடத்தில் வாங்கினேன் என்று எனக்கு தெரியாது, என்னுடைய கணவருக்கும், பிள்ளைகளுக்கும்தான் தெரியும். சர்வே எண்.41க்கு உரிய கிரையப் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.41ல் உள்ள தாவா சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்தது யார் என்றால் எனது கொளுந்தன்மார்கள் முகமது கனிபா, முகமது யூசுப் ஆகியோர் கிரையம் செய்து கொடுத்தார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif, Devakottai
Date: 2022.08.29 18:33:20 +0530